★ அரசு மீது சிங்களக் கைதிகள் குற்றச்சாட்டு

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 13 இதழ் 74
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25 — 04 — 1992

## பிக்குகள் ஆறுதல் கூறினர்

[யாழ்ப்பாணம்]

''கடந்த இருவருடங்களாக எம்மை விடுதலை செய்வதற்கு, அரசு எந்தவிதமான அக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்காதது எமக்கு மிகவும் மனவேதனையைத்தருகின்றது''

இவ்வாறு விடுதலைப் புலிகளிடம் சிறைக்கைதிகளாக இருக்கும் சிங்களப் பொலிசார் மற்று தம்மைச் சந்தித்த பௌத்த குருமார் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்கள்.

[4-ம் பக்கம் பார்க்க]

## மன்னார் வவுனியாவில் ஊரடங்கு அமுல்

[கொழும்பு]

வவுனியா, மன்னாரில் இன்று அதிகாலை 6 மணி முதல் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது

இவ்விரு மாவட்டத்திலும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கும் முகமாகவே இந்த ஊரடங்கு அமுல் செய்யப்படுள்ளது. மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு அமுலிலிருக்கும். [சி]

# யுத்தத்தை உடன் நிறுத்த அரசுடன் பேச்சு நடத்துவோம்

## பிரதம பௌத்தபிக்கு உரை

(யாழ்ப்பாணம்)

**யுத்தத்தை உடன் நிறுத்தி ஜனநாயக ரீதியிலான தீர்வொன்றை காணவேண்டியது மிக அவசியமாகும். இந்நிலை நீடிக்காமல் சமாதான தீர்வொன்றை காண்பதற்காக நாம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.**

இவ்வாறு பௌத்தபிக்குகளின் நல்லெண்ணத் தூதுக்குழுவின் தலைவர் ஸ்ரீ இசிபத்தான இராமய பிரதமகுரு வண.மடம்பாகம தேரோ தெரிவித்தார்.

நேற்று நண்பகல் யாழ்.அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபரையும் உயர் அதிகாரிகளையும் சந்திக்கச்சென்ற பௌத்த பிக்குமாரை யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. சண்முகநாதன் உயர் அதிகாரிகள் அரசாங்க செயலக வாசலில் பூரண கும்பம் வைத்து வரவேற்று மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. கே மாணிக்கவாசகர் தலைமை வகித்துப்பேசினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - பிக்குகள் இன்று 2-ம் சுற்றுப்பேச்சு

[யாழ்ப்பாணம்]

பௌத்த குருமார் குழுவுக்ும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான 2-வது கட்டப் பேச்சுவார்த்தை இன்று மாலை நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது

[4-ம் பக்கம் பார்க்க]

## கண்ணிவெடியில் சிக்கி 2 படையினர் பலி

(கொழும்பு)

மன்னார் - குஞ்சுக்குளம் பகுதியில் 'புலிகள்' மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ வாகனம்ஒன்று சிக்கி சிதறியதில் 2 படையினர் உயி

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளை தடை செய்வதற்கு தொண்டமான் கடும் எதிர்ப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளை இந்தியா தடைசெய்வதை அமைச்சர் தொண்டமான் கடுமையாக எதிர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக திரு. தொண்டமான் தெரிவித்ததாவது: புலிகளுக்கு எதிராக இந்தியாவில் எடுக்கப்படும் நடவடிக்கை அதே நிலையில் இந்தியாவிலும், இலங்கையிலும் நீண்ட காலமாக நிலவிய பாரம்பரிய நல்லுறவுகள்

[4ம் பக்கம் பார்க்க]

## நல்லை ஆதீனத்துடன் பௌத்த குழு பேச்சு

[யாழ்ப்பாணம்]

யாழ். வந்துள்ள பௌத்த குழுவினர் நேற்று நல்லை ஆதீனத்துக்குச் சென்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் பெரும் கிளர்ச்சி வெடிக்கும்

[சென்னை]

விடுதலைப் புலிகளை இந்தியா தடைசெய்யுமானால் தமிழகத்தில் பெரும் கிளர்ச்சியில் இறங்கப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தன்னை கொல்ல புலிகளின் தற்கொலைப்படை தமிழகம்

[4-ம் பக்கம் பார்க்க]

## ராஜீவ், ரஞ்சன் விசாரணையை இலங்கை அரசு தடுத்தது

[கொழும்பு]

ராஜீவ் காந்தியையும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவையும் கொல்ல பயன்படுத்தியதாக கூறப்படும் வெ பொருட்களையும் பிற உபகரணங்களையும் கைப்பற்றுவதற்கான விசாரணைகளை இலங்கை அரசு தடுத்துவிட்டதாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறும் திரு. காமினி திஸநாயக்கா கோரியுள்ளார்.

ஏற்கனவே இதுபற்றி பல சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டதும் தெரிந்ததே. [சி]

## புலிகளிடமுள்ள பகுதிகளை மீட்க விரைவில் படை நடவடிக்கை

(கொழும்பு)

புலிகளிடமிருந்து மீட்கப்படாத பகுதிகளை மீட்கபடையினர் எந்நேரத்திலும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று கூட்டுப் படை தலைமையக அதிகாரி கேர்ணல் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப்பகுதிகளைமீட்பதற்கு படையினர் திட்டமிட்டுள்ளதாகவும் எந்நேரத்திலும் இது நடக்கலாம்என்றும் அவர் கூறினார்.

இதேநேரத்தில் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிபர் மகஜர்கையளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகத்தில்வைத்து அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பௌத்த பிக்குகள் குழுவிடம் மகஜர் ஒன்றை கையளித்து உரையாற்றினார்.

இந்த மகஜரில் யாழ் மாவட்ட மக்களின் கல்வி, சுகாதாரம் உணவு மற்றும் போக்குவரத்து, காரியாலயங்களில் உள்ள குறைபாடுகள் இடம் பெயர்ந்தோர்களின் நிலமை மின்சாரம் இல்லாமையினால் மக்கள் படும்பாடு ஆகியன உட்பட சகல குறைபாடுகளும் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளது.

மேலும் அரசாங்க அதிபர்

(4- ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகருக்கே முதலில் மின்சாரம்

(கொழும்பு)

கிளிநொச்சி நகரத்துக்கு மட்டும் முதலில் மின்சாரம் கிடைக்கக்கூடிய விதத்தில் ஓயில் நிரப்பப்பட்ட இரு மின்மாற்றிகளை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை ஒப்புக்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் மின்சாரம் கிடைக்கக்கூடிய விதத்தில் ஒயில்கள் நிரப்பப்பட்ட மின்மாற்றிகள் அனைத்தையும் உடனடியாக

[4ம் பக்கம் பார்க்க]

## 18 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் பொலிசார் நடாத்திய தீவிரத்தேடுதல் வேட்டையில 18 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நகர்ப்புறத்தில் இத்தீவிர தேடுதல் நடவடிக்கை பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டது.

தனியார் விடுதிகளிலும், பஸ்களிலும், வீதிகளிலும் வைத்து இவ் இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில கைது செய்யப்பட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### பரீட்சை (ஆண்டு 4)

ஆண்டு 4 பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 26-04-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6201]

### தவறிவிட்டது

காரைநகரைச் சேர்ந்த பூமணி சகாதேவன், சிவசோன்மணி சகாதேவன் ஆகியோரின் 367801042V, 647942806V இலக்கங்களைக் கொண்ட அடையாள அட்டைகள் யாழ். வீதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் அ சின்னையா, ஈழநாடு லிமிட்டெட், சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி 6204)

நமசிவாயம் கைலாசவாசன் என்பவருடைய வவுனியா செல்வதற்கான [பாஸ்] அனுமதிப்பத்திரம் பேர்சுடன் வெலிங்டன் சந்திக்கும் எழிலகத்திற்கும் இடையில் 20-04-92 அன்று தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் நமசிவாயம் தில்லைவாசன், சதுமலை வடக்கு, யாமா சந்தி மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [சி-6205]

### தையல் இயந்திரங்கள்

பாவித்த தையல் இயந்திரங்களை விற்றுக்கொள்ளவும், தையல் இயந்திரங்களை வாங்கிக்கொள்ளவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீடுகளில் வைத்து திருத்திக்கொள்ளவும், தையல் இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை பெற்றுக்கொள்ளவும்: தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-6206]

### மீண்டும் புதிதாய் பிறப்போம்

இருபதாவது மீரா பிரசுரம் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதியது விரைவில் வெளிவருகின்றது. மீரா வெளியீடுகளை வாங்குங்கள் ஈழத்து வெளியீட்டுதுறைக்கு கை கொடுங்கள். [சி-6207]

### செவ்வாய் மாற்றம் நாளை மறுதினம்

27-04-92 முதல் வியாழனின் சுகபார்வையால் அமைதி ஏற்படும். செவ்வாய் மாற்றம், புத்தாண்டுப் பலன்கள் மௌனகுரு கடவுள் சுவாமிகள் அற்புத வரலாறு அடங்கியவை ரூ. 7/- எங்கும் விற்பனையாகின்றன. சோபிதா, யாழ்ப்பாணம், நூலாசிரியர்: சத்தியதாஸன் சித்தன்கேணிச் சந்தி. [சி-6208]

## 'பைசா' கோபுரம் சரிகிறது

(ரோம்)

இத்தாலியிலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற பைசா சாய்வு கோபுரம் எத்தருணத்திலும் சரிந்து விடக்கூடும் என நிபுணர் குழு ஒன்று அறிவித்துள்ளது.

800 ஆண்டுகளுக்கு மேலான தொன்மைமிக்க இந்த சாய்வு கோபுரத்தை ஒருவருடத்தினுள் புனர்நிர்மாணம் செய்யா விட்டால் பெரும் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென அந்தக்குழு தெரிவித்துள்ளது. [கே]

## நீர் பாய்ச்சும் 'பைப்' திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பிலுள்ள வயல் காணி ஒன்றில் விவசாயி ஒருவரால் நீர் பாய்ச்சிவிட்டு கிணற்றடியில் விடப்பட்டிருந்த 150 அடி நீளமான 'பைப்' ஒன்று இனம்தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று இரண்டாம் நாள்

ஈழத்துக் கலாவித்தகர்கள் கலந்து கொள்ளும்

உரையரங்கு, கவியரங்கு, இசையரங்கு, வழக்காடு மன்றம், பட்டி மன்றம், நடன நாடகம், மெல்லிசை நாடக அரங்கு போன்ற பல்சுவை நிகழ்வுகளுடன்

யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின்

வெள்ளி, பொன், பவள விழாக்களைச் சிறப்பித்து

திருமறைக் கலாமன்றம் எடுக்கும்

# முத்தமிழ் விழா

காலம்: 1992 ஏப்ரல் 24, 25, 26 தினங்களில்

இடம்: மன்ற அரங்கு, 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம்: இலவசம்

திருமறைக் கலாமன்றம்

(எ-2998)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-05-22ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவி,
காவற்பொறுப்பாளர் / சமையற்காரர் (தாழ்தரம்)

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 2985/- மாதமொன்றுக்கு (நிலையானது)

**தகைமைகள்:**

[அ] எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

[ஆ] தளபாடங்கள், மட்பாண்டத் தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி, துணிகள் என்பவனவற்றைப் பேணுவதிலும், சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

[இ] மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகளைத் தயாரிப்பதில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

[ஈ] பல்வேறு வகையான உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களைப்பற்றிய அறிவுடையராக இருப்பதுடன், குறித்த எண்ணிக்கையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களின் அளவு குறித்துப் பரிச்சயமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**

உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்.

**குறிப்பு:**

மேற்படி பதவிக்கான நியமனம் இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு, முத்திரையொட்டப்பெற்ற 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்றபடிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும.

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், தெளிவில்லாமல் விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
23-04-1992

(எ-2096)

## இராமகிருஷ்ண மடம் சமத்துவத்துக்கு பாடுபடுகிறது

[யாழ்ப்பாணம்]

''இராமகிருஷ்ண மடமானது மனிதனின் சமத்துவத்துக்காகவும், ஆன்மீக சுதந்திரத்துக்காகவும் பாடுபடுகின்றது.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி திருநெல்வேலி இராமகிருஷ்ண மடத்தில் நடைபெற்ற சுவாமி சாந்தானந்தாவின் பிறந்ததினவிழாவில் உரையாற்றும் போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: கலை கட்டுப்பாட்டுக்குள் அடங்கிசற்கும் கலையின் வீச்சு மிகத்தீவிரமாகும். இதன் மூலம் சிறந்த ஆக்கபூர்வமான கலைஞர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்றார். [சு]

### வடமராட்சி பேருந்து இயக்குனர் சங்கம்

நெல்லியடி - கரவெட்டி

[பாதை இலக்கம்: 750]

## பதவி வெற்றிடம்

### நேரக் கணிப்பாளர்

**தகைமைகள்**

1. 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
2. வடமராட்சியில் வசிப்பவராக இருத்தல்வேண்டும்.
3. கல்வி: க. பொ. த (சாதாரணம்).
4. போக்குவரத்து சேவையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் முடிவு திகதி 30-4-92. மாலை 4 மணிவரை சங்க காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்

நேர்முகப் பரீட்சை எழுத்து மூலம் எம்மால் அறிவிக்கப்படும்.

சி. சுப்பிரமணியம்
செயலாளர்.

சி. புலேந்திரன்
தலைவர்.

[ஏ 2100]

# ஓராண்டு நினைவஞ்சலி



### செல்வி பா. இந்திரகாந்தினி

(தொல்லு)

(யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி)

மலர்வு: 21-10-1983 உதிர்வு: 07 05-1991

திதி: 1992-04-25

ஆசைக்கு அன்பு மகளாயும்
அண்ணன்களுக்கோர் அன்புத் தங்கையாயும்
அக்காவிற்கிணைபிரியா சகோதரியாயும்
உற்றார் உறவினர்க்கு அன்பு நட்பாயும்
திகழ்ந்தாயே எம்வாழ்வில்ஆண்டொன்றுதீர்ந்தாலும்
தீராது எம் சோகம் திரும்பி வரமாட்டாயோ!

என்றும் உன் நினைவால் வாடும்:

**அன்பின் அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார்.**

**L. பால்ச்சாமி**
5ம் ஒழுங்கை,
அரசடி நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி 6102)

# சத்யஜித்ரேயின் கலைப்படைப்புக்கள் காலத்தைவென்றகருத்தோவியங்கள்

சத்யஜித் ரே என்ற கலா மேதை காலமானார்.

கடந்த மூன்று மாதங்களாக இருதய நோயுடன் போராடிய, இந்த மாபெரும் கலைஞரின் இறுதி மூச்சு, அவரின் 70வது வயதில் நின்றுவிட்டது.

கடந்த 4 தசாப்தங்களாகக் கலையையே வாழ்வாகக் கொண்டிருந்த ரேயின் மரணம், கலைப்பரப்பில் ஒரு நிரந்தரமான வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

1921ம் ஆண்டு வங்காளக் கிராமம் ஒன்றில் பிறந்த சத்யஜித் ரே, கலை, இலக்கிய ஈடுபாடு கொண்ட குடும்பச் சூழலில் வளர்ந்தார். இளமையில் இருந்தே கலை, இலக்கியங்களால் ஈர்க்கப்பட்ட அவர், ரவீந்திரநாத் தாகூரினால் அமைக்கப்பட்ட சாந்திநிகேதனில் ஓவியக் கலையைக் கற்றுக்கொண்டார். சாந்திநிகேதனின் தொடர்பு, அவரது கலையார்வத்தை மேலும் தூண்டிவிட்டது. இளமையில் இருந்த நல்ல கலா அம்சம் மிக்க திரைப் படங்களோடு பரிச்சயம் கொண்டிருந்த ரே, நல்ல திரைப் படங்களை ரசிப்பது மட்டுமல்ல, அதன் அடிப்படை நுட்பங்கள் பற்றிக் கற்றுத்தெளிவதிலும் அக்கறை கொண்டிருந்தார்.

1955ல் சத்யஜித்ரே, தனது முதல் திரைப் படமான 'பதர் பாஞ்சாலியை' உருவாக்கினார். திரைப் படக் கலையின் நுட்பங்களை மட்டுமல்ல, வாழ்வின் உண்மைத் தன்மைகளையும் வெளிப்படுத்தும் இந்த எளிமையான திரைப் படம், சத்யஜித் ரேயை ஒரு மிகச் சிறந்த கலைஞனாக உலகிற்கு அறிமுகப்படுத்திவைத்தது. 'மானுடத்தின் தலை சிறந்த ஆவணம்' என்று புகழப்பட்டு நின்ற 'பதர்பாஞ்சாலி' 12க்கும் மேற்பட்ட சர்வதேசத் திரைப்பட விருதுகளை ரேக்குப் பெற்றுக் கொடுத்தது, ரே ஏறக்குறைய 30 கதைப் படங்களை உருவாக்கியுள்ளார். இவை ஒவ்வொன்றும் சர்வதேசத் திரைப்படவிழாக்களில் கலந்துகொண்டதோடு, ஏதாவது ஒரு சர்வதேச விருதுகளைப் பெற்றவையாகவும் உள்ளன.

**சசி. கிருஷ்ணமூர்த்தி**

தன்னைச் சூழ்ந்துள்ள வாழ்வின் உண்மைத் தன்மைகளை நேர்மையுடன் கலைக்கேயுரிய நுட்பங்களுடன் மிக நேர்த்தியாகத் திரைப்படங்களாக்கிய சத்யஜித் ரே திரைப்படத் துறையில் கிடைக்கக்கூடிய அதி உயர் விருதுகளையும், கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

இந்திய அரசு தனது அதி உயர் விருதுகளான 'பத்மவிபூஷன்', 'பத்ம பூஷன்', 'தாதா சாஹேப் பால்கி விருது' போன்றவற்றை ரேக்கு வழங்கியிருந்தது. அவருக்குப் 'பாரத ரத்னா' என்ற பட்டமும் வழங்கப்படும் என்று அண்மையில் தான் இந்திய அரசு அறிவித்தது. ஆறு இந்தியப் பல்கலைக் கழகங்கள் அவருக்குச் சிறப்புக் கலாநிதிப் பட்டங்களைச் சூட்டியுள்ளன. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இதுவரை இரண்டேயிரண்டு திரைப்பட நெறியாளருக்கே விசேட கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. அதில் ஒருவர் சார்ளி சப்ளின். மற்றவர் சத்யஜித் ரே. 'கடைசி அரை நூற்றுண்டின் அதி உயர் திரைப் பட நெறியாளர்' என்ற புகழை, பிரித்தானியப் பல்கலைக்கழகம் 1975ல் சூட்டியது. மாஸ்கோவில் நடைபெற்ற திரைப்பட விழா ஒன்றின்போது, 'எல்லாக் காலங்களுக்குமான ஒன்பது மகத்தான திரைப்படக் கலைஞர்களுள் ரேயும் ஒருவர்' என்று குறிப்பிடப்பட்டது. 1989ல் பிரான்ஸின் ஜனாதிபதி கல்கத்தாவுக்குநேரடியாகவிஜயஞ்செய்து, அந்த நாட்டின் அதி உயர் விருதான Legion de Honour ஐ அளித்துக் கௌரவித்தார்.

இவ்வருட முற்பகுதியில் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது, அவரது 40 வருட காலப் பன்முகப்பட்ட திரைப் படச் சாதனைகளுக்காக 'விசேட ஒஸ்கார் விருது' வழங்கப்பட்டமைகுறிப்பிடத் தக்கது. ஒஸ்கார் வரலாற்றில் இவ்விசேட விருதைப் பெற்றுக்கொண்டவர்கள் மிகச் சிலரே.

உன்னத கலைப் படைப்புக்கள் காலத்தை வென்றவை. சத்யஜித் ரேயின் படைப்புக்களும் அத்துணைச் சிறப்புக் கொண்டவையே. அவரது படைப்புக்களினூடே அவர் என்றும் கலாரசிகர்களால் நினைவு கூரப்படுவார்.

## கெயர் பணிப்பாளருக்கு மதிய போசன விருந்து

(யாழ்ப்பாணம்)

கெயர் யு எஸ். ஏயிட் நாட்டுப் பணிப்பாளர் திருமதி வீ. மொன்காஸ்ரருக்கும், அவர் குழுவினருக்கும், யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் மதியபோசன விருந்தளித்து கௌரவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பதினையாயிரம் விவசாயிகளுக்கு கெயர் ஸ்தாபனம் வழங்கிவரும் உதவித்திட்டங்களை பார்வையிடவந்துள்ள திருமதி மொன்காஸ்ரர், விவசாயததிட்டங்கள் இங்கு சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் எதிர்காலத்தில் கூடிய உதவித்திட்டங்களை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு சிபார்சுகள் செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார். [வி]

## தமிழ்தொழில்நுட்பகல்லூரி நிறுவுமாறு கோரிக்கை

(ஹாலி எல)

தமிழில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி ஊவா மாகாணத்தில் நிறுவுமாறு கைத்தொழில் இராஜங்க அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான திரு எம். எஸ். செல்லச்சாமி ஜனதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊவா மாகாணத்துக்கான பல்கலைக்கழகக் கல்லூரி மொனருகலையில் ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு பதுளையில் இருப்பது சிங்கள தொழில் நுட்பக் கல்லூரி. இதைக்கவனத்தில் எடுத்துக் கொண்டு தமிழருக்கென ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை ஏற்படுத்தித்தருமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (சு)

## இலங்கைகடலில்எண்ணெய் வளஆய்வுநடத்தஆலோசனை

[கொழும்பு]

இலங்கை கடலில் எண்ணெய்வள ஆய்வு நடத்த இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயு கமிஷன்இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதற்காக இலங்கையில் கரையோர கடற்பகுதி பல் வேறு தொகுதிகளாக வரையறுக்கப்பட்டுள்ளது அவற்றில் மன்னார், கல்பிட்டி ஆகிய கரையோர கடற்பகுதியில் எண்ணெய் வள ஆய்வு செய்வதற்கு இந்திய நிறுவனம் ஆர்வம் காட்டி வருகிறது.

## நினைவஞ்சலி ஆராதனை

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வாவின் நினைவஞ்சலி ஆராதனை தெல்லிப்பழை பிரதான வீதியில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையில் நாளை 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு நடைபெற இருக்கிறது.

இவ்நினைவஞ்சலி நிகழ்ச்சியில் வணபிதா டி. ஜே. அம்பலவாணர் உரைநிகழ்த்தவுள்ளார்.

## அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கூட்டம்

[யாழ்ப்பாணம்]

கோட்ட ரீதியாக சகல அதிபர்களும் ஆசிரியர்களும் பின் குறிப்பிடப்படும் இடத்துக்கு தவறாது வருகை தரும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இன்று 25-ம் திகதி சனிக்கிழமை பி. ப. 4 மணிக்குவடமராட்சிக் கல்விக் கோட்ட உடுப்பிட்டி, நெல்லியடி, வல்வெட்டி, கரவெட்டி, கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை நெல்லியடி ம. ம, வித்தியாலயத்திலும், மு. ப. 10 மணிக்கு வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, இளவாலை, காரைநகர் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும், நாளை 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணிக்கு அளவெட்டி. தெல்லிப்பளை, அம்பனை, காங்கேசன்துறை, மல்லாகம் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை யா/அருணோதயாக் கல்லூரி மண்டபத்திற்கும் 27ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு வடமராட்சிக் கல்விக்கோட்ட புலோலி, பருத்தித்துறை, நாகர்கோவில், உடுத்துறை கொத்தணி அதிபர்கள, ஆசிரியர்களை யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கும் பி. ப. 3. 30 மணிக்கு மருதனமடக் கல்விக்கோட்ட நவாலி, மானிப்பாய் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும் உரும்பிராய், உடுவில், வசாவிளான், ஏழாலை, சுன்னாகம் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கும் அச்சுவேலி, புத்தூர், கோப்பாய் கொத்தணி அதிபர்கள் ஆசிரியர்களை யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும் வருகை தரும் வண்ணம் வேண்டுகின்றனர்.

## இராசிபலன்

**25/04/1992**

**சனிக்கிழமை**

**(தமிழுக்கு சித்திரை 13)**

அட்டமி பி. ப. 4. 47 வரை திருவோணம் பி. இ. 3. 47 வரை: மரணயோகம், இராகு காலம் காலை 8. 59 முதல் 10. 29வரை சுபநேரம் பகல் 2, 59 முதல் 4.59 வரை.

மேடம்: சுபசோபன நிகழ்ச்சி, உவகைப் பூரிப்பு, பணவரவு,

இடபம்: வியாதி பீடிப்பு, தொழில் விவகாரம், மணமுடை.

மிதுனம்:; குடும்பசச்சரவு, தொழில்நஷ்டம், காரியதடை

கடகம்: தீவிர முயற்சி, தொழில் லாபம், கடன்வரவு.

சிங்கம்: குடும்ப உறவு, அதிக பிரயாசம், பயணம்.

கன்னி: மனபேதம், ஞான சிந்தனை, குடும்பபகை

துலாம்: பிறர்தொல்லை, பயணஅலைச்சல், விதண்டா வாதம்.

விருச்சிகம்: பெற்றோர் ஆசி, பெரியோர் வருகை, கல்வியால் சிறப்பு.

தனுசு: புத்திதடுமாற்றம், அதிகவேலைப்பளு, உடல் இளைப்பு,

மகரம் பணவருவாய், தொழில் சிறப்பு, அயலவர் உதவி

கும்பம்: உஸ்ணரோகம். வைத்திய செலவு, சகோதர நன்மை,

மீனம்: தெய்வீக செலவு, தானதர்மம், குடுப்ப உல்லாசம்.

ஜோஸ்யர்

## 763 தமிழ் குடும்பங்கள் பொத்துவிலில் இடம்பெயர்வு

(அம்பாறை)

பொத்துவில் பகுயில் உள்ள 763 தமிழ்க்குடும்பங்கள் 21 மாதங்களாக கோமாரி கிராமத்தில் இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளனர்.

இவர்கள் வாழும் இடங்கள் அடிப்படை வசதிகள் இல்லையென்றும் மலசல கூட வசதிகள் குறைவாக இருப்பதோடு குளிப்பதற்கும் குடிப்பதற்கும் ஒரே கிணறு பயன்படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

## அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் தொண்டர் ஆசிரியர்க்கான கூட்டம் நடைபெறவுள்ளது, அத்துடன் வட பகுதித் தொண்டர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் கொழும்பு சென்று தமது நியமனத்திற்கான பேச்சுவார்த்தை தொடர்பாக யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் அனைவரது விபரங்கள் சேகரிக்கப்படுகின்றது. இதனால் சகல தொண்டர் ஆசிரியர்களும் தத்தமது விபரங்களை எதிர்வரும் 27ம் திகதி பட்டப்படிப்புகள் கல்லூரி அலுவலகத்தில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## சிறந்த பரிசுக்கென ஏழு நூல்கள் தெரிவு

(கொழும்பு)

சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1990ம் ஆண்டில் இலங்கையரால் வெளியிடப்பட்ட 7 நூல்கள் சிறந்த நூல் பரிசுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நூல்களின் பெயர்களும், ஆசிரியர்கள் விபரமும் வருமாறு:

'மேய்ப்பர்கள்'-எஸ். அகஸ்தியர், 'ஈழத்து இசை நாடக வரலாறு'-கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை, 'நாளைய நோக்கிய இன்றில்' (புதுக் கவிதை), 'மேமன் கவி', சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்'-விரிவுரையாளர் திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம், 'அக்கரைப்பற்று வரலாறு'-ஏ. ஆர். எம். சலீம், 'அரசறிவியலின் அடிப்படைத் தத்துவங்கள்'-அமரர் குமாரலிங்கம் ரஞ்ஜகுமார், 'உயிர் சாத்த ஓவியம்'-பா. சத்திய சீலன்.

இந்நூல்களுக்கான பரிசுகள் மே மாதம் 10ம் திகதி இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விருது வழங்கல் வைபவத்தில் பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க பரிசுகளை வழங்குவார். (சி)

## ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் முகாமிலிருந்தும், பலாலிஇராணுவ முகாமிலிருந்தும் நேற்று முன்தினம் அதிகாலை அராலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

படையினர் சுமார் 10க்கு மேற்பட்ட ஷெல்களை ஏவியதனால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை கிழக்கு கடற்கரையோரப் பகுதியை நோக்கியும் அதிகாலை வேளை தீவுப்பகுதி முகாம் படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் காலை மண்டைதீவு இராணுவமுகாமிலிருந்து குருநகர்கடற்பரப்பை நோக்கிப் படையினர்துப்பாக்கிப் பிரயாகம் செய்தனர். (56)

## உற்சவகால சேவைக்குப் பாராட்டு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயதேர்உற்சவதீர்த்த உற்சவங்களின் போது அங்கு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் முதலுதவி சிகிச்சை முகாம் நிறுவி பக்தர்களுக்கு ஆற்றிய சிறந்த சேவையைப் பாராட்டி நன்றி தெரிவித்து ஆலய பரிபாலனசபை படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம் பிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (72)

# ஊர்வலம் பேரணிகள் நடத்த தமிழகத்தில் புதிய சட்டம்

(சென்னை)

தமிழகத்தில் ஊர்வலங்கள், பேரணிகள் நடைபெறும் போது பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டால் அதனைச் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து அறவிடுவது தொடர்பான மசோதா ஒன்று தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் வகுப்பு, மொழி, இனக் குழுக்களின் ஊர்வலம், ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டால் அதற்குரிய இழப்பீட்டு தொகையைச் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள குழுக்களிடமிருந்து வசூலிப்பதற்கு இம்மசோதா வகை செய்யும்.

பொதுச் சொத்துக்களைத் தீ அல்லது வெடிகுண்டுகள் மூலம் தகர்க்க முயற்சி செய்வோருக்கு 2 முதல் 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கவும் பேருந்துகள் மீது கல்லெறிவோருக்கு 6 மாதம் முதல் 5 வருடம் வரை சிறைத் தண்டனை வழங்கவும், வீதி, பாலங்களைச் சேதப்படுத்துதல் அல்லது அவற்றில் தடைகளை ஏற்படுத்துதல் போன்றவற்றுக்கு ஓராண்டு முதல் 5 வருடம் வரை சிறைத் தண்டனை வழங்கவும் நூறு ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துவோருக்கும் இத்தண்டனை பொருந்தும்.

மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் செல்வதைத் தடுக்கவும் இந்தச் சட்டம் வகைசெய்கிறது. [சி]

# இந்துப் பேரவை பௌத்த பிக்குகள் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

இந்துக் கோவில்களுக்கு வேண்டிய கற்பூரம், மற்றும் பொருட்களை இராணுவம் தடை செய்வதால எமக்கு அன்றுடம் பெரும் சிரமம் ஏற்படுவதாக இந்து பேரவை குழுவினர், பௌத்த சமாதானக் குழுவினரிடம் நேற்று யாழ். செயலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்தார்கள்.

இதே நேரம் வங்கி முகாமையாளர் குழுவினரும், பௌத்த குழுவினரை நேற்று யாழ். செயலகத்தில் சந்தித்து மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்கள். [வி]

# 3 இடங்களில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள்

(கொழும்பு)

மன்னார், திருமலை, மொரவேவாப் பகுதிகளில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கைகளின் போது புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் லத்த மோதல்கள் இடம்பெற்றதாகவும் அவர் கூறினர்.

சில இடங்களில் புலிகளுடன் மோதுவதற்கு வசதியாக ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் பெருமளவு படையினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு, மற்றும் ஜெனரல் ரஞ்சன் விஜேரத்ன கொலை தொடர்பான தகவல்கள் தெரிந்திருந்தும் அவற்றைத் தெரிவிக்க மறுத்தமைக்காக குற்றம் சாட்டப்பட்ட கொழும்பு தமிழ் வர்த்தகர் ஒருவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த பேட்டில் வசிப்பவரான சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் என்பவரே தமது குற்றத்தை ஒப்புக்கொண்டவராவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## புலிகளை தடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்படாத வண்ணம் கவனிக்கவேண்டும்.

எந்த செயலுக்கும் எதிர் விளைவு உண்டு. பதவியிலுள்ள அரசுகள் இதனை நினைவில் வைத்திருக்கவேண்டும். விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவும் தமிழகமும் தான் அளவுக்கு மீறி ஆதரவு கொடுத்து வந்ததென்று இலங்கை அரசு குற்றம்சாட்டி வந்தது.

விடுதலைப் புலிகளை இந்தியா தடை செவதன் மூலம் இலங்கை கூறும் குற்றச்சாட்டு உண்மைதான் என்று நிருபிக்கப்பட்டுவிடும் என்றும் திரு. தொண்டமான் எச்சரித்துள்ளார். (சி)

## கந்தபுராணப் படிப்பு

[யாழ்ப்பாணம்]

சுன்னுகம் மயிலனி கந்தசுவாமி கோவிலில் கடந்த வியாழக்கிழமை முதல் கந்தபுராணப் படிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது [சு]

## உதைபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினல் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் அணி நெல்லியடி ம. மா. வித்தியாலயத்தில் மோதும்.

[ஊர்காவற்றுறை]

லெப்டினன் கேணல் விக்ரர் ஞாபகார்த்தமாக உரும்பிராய் 'ஒஸ்கா' விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருமலை நட்சத்திரத்தை எதிர்த்து வதிரிசெங்கதிர் விளையாட்டுக் கழகம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் விளையாடவுள்ளது. [59]

## வங்கிகள் விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

கடந்த தமிழ்-சிங்கள புத்தாண்டு தினத்தன்று வங்கிகள் அனைத்தும் வேலை செய்தமைக்காகவே நேற்று விசேட விடுமுறை விடப்பட்டதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [வி]

## ஆலோசனைக் கூட்டம்

[பண்டத்தரிப்பு]

மே தினத்தை சிறப்பாக கொண்டாடுவது பற்றியும், ஊர்வலத்தில் பங்குபற்றுவது தொடர்பாகவும் ஆலோசனைக் கூட்டமொன்று கடந்த புதன்கிழமையன்று சித்தன்கேணி கணேச வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

# அரச ஊழியர்க்கு விரைவில் சம்பள உயர்வு

(கொழும்பு)

அரசு துறைகளிலுள்ள சகல ஊழியர்க்கும் விரைவில் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

அரசாங்க துறைகளிலுள்ளவர்களுக்கு பொதுவான சம்பள உயர்வு அளிப்பது பற்றி ஆராயுமாறு அரசாங்கம் சம்பளக்கமிஷனை கேட்டுள்ளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மூன்றுமாத காலத்துள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு இக்கமிஷன் கேட்கப்பட்டுள்ளது. கமிஷன் நியாயமான சம்பள உயர்வொன்றை அளிப்பதற்கு சிபார்சு செய்வதற்கு தொழிற்சங்கங்களுடனும் மற்றும் குழுக்களுடனும் நிர்வாக அமைப்பில் மாற்றங்களை செய்வதற்கு செய்யப்பட்டுள்ள சிபாரசுகளை மனதில் கொண்டு கமிஷன் சம்பள முரண்பாடுகளை நீக்கும் என்றும் திரு. விக்கிரமசிங்க கூறினர். [சி]

# மருத்துவ பீடத்திற்கு புதிதாக 800 மாணவர்கள் அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் கல்வியாண்டின் போது மருத்துவப்பீடத்திற்கு புதிதாக 800 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளார்கள்.

கடந்த ஆண்டு 884 பேர் அனுமதிக்கப்பட்டனர். கொழும்பு, யாழ்ப்பாணம், பேராதனை, றுகுணு பல்கலைக்கழக வைத்தியபீடங்களுக்கு இவர்கள் அனுமதிக்கப்படுவர்.

1990 ஆகஸ்ட் 1991 ஏப்ரல் ஆகிய மாதங்களில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையில் தகுதி பெற்றவர்களிடமிருந்து ஒன்பதாயிரம் பேருக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும். அனுமதிக்கான வெட்டுப்புள்ளி (கட் ஒவ் மாக்ஸ்) குறித்து விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## யுத்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்துப்பேர் அடங்கிய பிக்குமார் குழுவில் செயலாளர் பிக்குமார் எல்லோரையும் அறிமுகம் செய்துவைத்தார்.

யாழ். அரசாங்க அதிபர் அளித்த மகஜருக்கு பதில் அளித்துப் பேசிய பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக் குழுவின் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

''யுத்தத்தை நிறுத்தி ஜனநாயகரீதியிலான தீர்வொன்றினைக் காணவேண்டியது மிக அவசியமாகும். யுத்தத்தினுல் அழிவே ஏற்படும். அபிவிருத்தி ஏற்படமாட்டாது. மக்களின் சொத்துக்கள் உடமைகள் அரசாங்க கட்டிடங்கள் ஆலயங்கள், பாடசாலைகள் இடிந்துபோய் இருப்பதைக் காண மிகுந்த துக்கமாகஇருக்கின்றது. இந்நிலை நீடிக்காமல் ஜனநாயகரீதியிலான தீர்வொன்றை காண்பதற்கு நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவோம்''

எமது நல்லெண்ணத்தூதுக் குழுவினர் அரசாங்கத்தின் சார்பிலோ அல்லது அரசியல் கட்சிகளின் சார்பிலோ இங்கு வரவில்லை. பௌத்தகுருமார்கள் என்ற காரணத்தினுலேயே இங்கு வந்துள்ளோம். இவ்வளவு காலமும் வராமல் காலம் தாமதித்து வந்தமைக்கு துக்கப்படுகின்றோம். தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் அழைப்புக்கிடைத்ததும் இங்கு வந்துள்ளோம். இங்கு வந்த பின்புதான் இங்குள்ள நிலைமையைக் காணக்கூடியதாக வுள்ளது. அரசாங்க அதிபர் இங்குள்ள மக்களின் நிலமையையும் குறைபாடுகளையும் தெரிவித்துள்ளார். இவற்றைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்துடன் நேரடியாகப் பேசித் தீர்த்துவைக்கலாம் என அபிப்பிராயப்படுகின்றோம். குறிப்பாக மின்சாரம் கிடைப்பதற்கு முயற்சி செய்வோம். பௌத்த குருமார்கள் ஆகிய நாங்கள் இங்குள்ள நிலைமைகளை அரசாங்கத்துக்குப் பௌத்த குருமார் என்ற முறையில் எடுத்துக்கூறச் சகல உரிமையும் இருக்கிறது என்றும் கூறினர். [137]

## தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளதாக முதல்வர் ஜெயலலிதா கூறுகின்ருர். ஆனல் தற்போதையநிலையை திசைதிருப்பவே ஜெயலலிதா இவ்வாறு ஒரு தந்திரத்தை கையாள்கிருர்.

விடுதலைப் புலிகளை தடை செய்தால் அது உலகத் தமிழினத்திற்கு இந்தியா செய்யும் துரோகம் என்று தெரிவித்தார். [சி]

## நீர்ப்பாய்ச்சும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யாதவர்களினுல் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளது,

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னத்துரை கந்தசாமி என்பவரது சுமார் ஒன்பதினுயிரம் ரூபா பெறுமதியான பைப்பே கடந்த ஞாயிறு இரவு திருட்டுப் போயுள்ளது. (72)

## அரசுமீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். நகரில் நேற்றுக்காலை புலிகளிடம் கைதிகளாக இருக்கும் 40 பொலிசாரையும் ஒரு இராணுவச் சிப்பாயையும் பௌத்த குழுவினர் சந்தித்து சுமார் ஒன்றரை மணித்தியாலயங்கள் பேசி அவர்களுக்கு ஆறுதல் கூறினர். [வி]

## புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த குருமார் முதல் கட்டப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்த யோசனைகளுக்குப் புலிகள் பதிலளிப்பார்களென்றும் கூறப்படுகின்றது. [வி]

## கண்ணிவெடி

(1ம் பக்கத் தொடர்ச்சி

ரிழந்ததுடன் 5 படையினர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் இதில் சிக்கிய வாகனம் முற்ருக சேதமடைந்ததாவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (மா-சி)

## நல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாரை சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தினுர்கள்.

இதே நேரம் நேற்று ஒய்வூதிய சமமேளன ஒன்றியம, அரச சார்பற்ற பிரதிநிதிகள் ஒன்றியம், இடம்பெயர்ந்த நிலக மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரும் பௌத்த குருமார் குழுவை தனித்தனியாக சந்தித்து பேச்சுக்கள் நடத்தியதுடன் மகஜர்களையும் சமர்ப்பித்தனர்,

இன்று இக்குழுவினர் 'தமிழீழ இந்துமத குருமார் ஒன்றியத்தை சந்தித்து பேசவுள்ளனர். [வி]

## வேலணை கோட்ட ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக் கோட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்கும், ஒய்வூதியம் பெருத ஆசிரியர்களுக்கும் உள்ள பிரச்னைகளை அறிவதற்கும், தீர்த்து வைப்பதற்கான வழிகளை அறிவதற்குமாக 27-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் அக்கடமி மண்டபத்திற்குச் சகல ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி புலேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## யாழ். அரச அதிபர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாவிட்டபுரம் ஆலயம் தொடர்பான மகஜர் ஒன்றையும் கையளித்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரையும் சந்திக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

வங்கி, வைத்தியசாலை மற்றும் திணைக்களங்களிலிருந்து கலந்துகொண்டவர்களும் தங்கள் தங்கள் குறைபாடுகளையும் தேவைகளையும் பௌத்த குழுவிடம் தெரிவித்தனர். (137)

## 18 தமிழ் இளைஞர்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அம்பாறை, மகரகம துண்டு வெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் வாக்குமூலத்தை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளாக பொலிசார் தெரிவித்தனர். [ரி]

## கிளிநொச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்ப முடியாதென்றும், தற்போது இரு மின்மாற்றிகளை மட்டுமே அனுப்புவதாகவும், அவற்றிலொன்று கிளிநொச்சி நகரத்துக்கும் மற்றது கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் பாவிக்கும்படி மின்சார சபை ஆலோசனை தெரிவித்துள்ளதாம். [வி]

## புலிகளிடமுள்ள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அகதிகள் புலிகளிடமிருந்து மீட்கப்படாத பகுதிகளில் குடியேறவேண்டாம் என்றும் இந்த இடங்களை மீட்க, ராணுவ நடவடிக்கை எடுக்கும்போது இந்த அகதிகள் பாதிக்கப்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சுவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81